# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.9/2021

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 21–01–2026.

பெயர் = பாலு

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் பட்டா கொடுக்கவில்லை என வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் நான் என்ன காரணத்திற்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் உள்ளூர்காரர் என்பதால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் பங்காளிகள். வாதி என்னுடைய பங்காளி உறவுமுறை என்பதை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் விவரமும் சொத்தை சுற்றி இருப்பவர்கள் விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவாச்சொத்து வாதியின் தந்தைவழியில் பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரிதான் நத்தம் புறம்போக்கு இடம். வாதியின் மாமனார் வெள்ளைச்சாமிக்கு பாத்தியப்பட்டது தாவாச்சொத்து என்றால் சரியல்ல. அது அரசாங்கச்சொத்து என சாட்சி கூறுகிறார். அரசாங்கத்தின் மூலம் வெள்ளைச்சாமிக்கு பாத்தியமான சொத்தில் அவர் ஆடு மாடு கட்டிவந்து வெள்ளைச்சாமியின் மகளை பெரியசாமி கட்டியுள்ளதால் பெரியசாமி தாவாச்சொத்தில் வீடு கட்டி இருந்துவருகிறார் என சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார்.

(2) 1ம் பிரதிவாதி தங்கவேலும், பெரியசாமியின் மாமனாரும் பங்காளிகள் என்றால் சரிதான். தங்கவேலுவின் அப்பாவும், பெரியசாமியின் மாமனார் வெள்ளைச்சாமியின் தந்தையும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் லெக்கமூப்பர். அழகர் மூப்பர் என பெயர் உள்ளதா என்றால் அவ்வாறும் அழைப்பார்கள் என சாட்சி கூறுகிறார். எனக்குத்தெரிந்து 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் லெக்கமூப்பர் என அழைப்பார்கள். பெரியசாமியின் மாமா வெள்ளைச்சாமிக்கு 2 பிள்ளைகள் ஆண்–1, பெண்–1. வெள்ளைச்சாமியின் பிள்ளைகளுக்கு வாரிசுகள் இருக்கிறார்கள் என்றால்

சரிதான். தாவாச்சொத்து வெள்ளைச்சாமியின் மற்ற நபர்களுக்கு போகாது ஏனென்றால் நத்தம்புறம்போக்கு என சாட்சி கூறுகிறார். நான் என்னுடைய ஆதார் அட்டை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் வழக்கை நிரூபணம் செய்வதற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் இல்லை என்றால் சரிதான். நான் வாய்வழியாக சொல்லக்கூடிய சாட்சியம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்பதால்தான் வாதியின் வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் கிழக்கே புறம்போக்கு இடம் உள்ளது. தாவாச்சொத்திற்கு மேற்கேயும் புறம்போக்கு இடம் உள்ளது.

(3) வழக்குச்சொத்தின் கிழக்கே 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான இடமும், வழக்குச்சொத்திற்கு மேற்கே உடன்பங்காளியான சோலைமூப்பருக்கு பாத்தியமான இடமும் உள்ளது என்று வா.சா.1ன் குறுக்குவிசாரணையில் சொல்லியுள்ளதால் நான் வாதியின் வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையை 2,3ம் பிரதிவாதிகள் தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.21 14:33:11 +0530